செ.வெ.எண்:221 நாள்:02.04.2018

# பத்திரிக்கை செய்தி

திருநெல்வேலி மாவட்டத்தில் தற்போது 8,64,822 மின்னணு குடும்ப அட்டைகள் பயன்பாட்டில் உள்ளது. இந்த குடும்ப அட்டையில் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதந்தோறும் அரிசி இலவசமாகவும், சர்க்கரை, பருப்பு, பாமாயில், கோதுமை, மண்ணெணணெய் ஆகியவை மானிய விலையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. குடும்ப அட்டை வைத்துள்ளவர்களில் பொரும்பாலோர் வசதியாக உள்ளவர்களாக இருப்பதால் இவர்கள் அரிசி, பருப்பு சீனி, பாமாயில் போன்ற பொருட்களை நியாய விலைக் கடைகளுக்கு சென்று வாங்குவது இல்லை. இவ்வாறு வாங்காத பொருட்களை போலிப் பட்டியல் மூலம் விற்பனை செய்வதால் அரசுக்கு இழப்பு ஏற்படுகிறது. இதனை தவிர்க்க, உணவுப் பொருள் வழங்கல் துறை விட்டுக் கொடுத்தல் என்ற புதிய திட்டத்தை கொண்டு வந்துள்ளது. இந்த திட்டத்தில் குடும்ப அட்டைதாரர் நியாய விலைக் கடை மூலம் வழங்கப்படும் அரிசி, பருப்பு, சீனி, பாமாயில் கோதுமை, ஆகிய உணவுப் பொருட்கள் தங்களுக்கு தேவை இல்லை கருதினாலோ, அல்லது சில மாதங்களுக்கு மட்டும் தேவையில்லை என்றாலும் அல்லது ஏதாவது சில பொருட்கள் தேவையில்லை என கருதினாலும் அவர்கள் இந்த திட்டத்தின் மூலம் பொருட்களை விட்டுக் கொடுக்கலாம். விட்டுக் கொடுக்கும் திட்டத்தின் காரணமாக குடும்ப அட்டை ரத்து செய்யப்படமாட்டாது. மேலும் போலிப் பட்டியல் மூலம் விற்பனை செய்யப்படுவதும் தடுக்கப்படும். இது தவிர எந்த பொருளும் தேவை இல்லை எனில் அவர்கள் **None Card** எனப்படும், எப்பொருளும் வேண்டாதோர் அட்டையாகவும் மாற்றிக் கொள்ளலாம். இது தொடர்பான தகவல் அறிய **www.tnpds.gov.in** என்ற இணையதள மூலமாகவோ, அல்லது செல்போன் செயலி tndpds மூலமாகவோ, அல்லது 9445000379 என்ற எண்ணுக்கு தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி